ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2247/8 - 2021 සැප්තැම්බර් මස 28 වැනි අඟහරුවාදා - 2021.09.28

*2247/8 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 28 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணாயக்கார ஆகிய நான், குறித்த சபைக்கு ஹக்மன நீர் வழங்கல் திட்டத்தின் கீழ் குழாய் கிணற்றிற்கான நீர் இறைக்கும் இயந்திரசாலையை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதியொன்றினை சுவீகரித்துக்கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக் கொள்வதை இக்கட்டளையினுடாக அனுமதிக்கின்றேன்.

**வாசுதேவ நாணாயக்கார,**
நீர் வழங்கல் அமைச்சர்.

தொடர்பு இல.: DVP/02/02/MH/170.
நீர் வழங்கல் அமைச்சு,
இலக்கம் 35, "லக்திய மெதுர",
புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2021, செத்தெம்பர் 21.


*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

*மாத்தறை மாவட்டத்தில், ஹக்மன பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம் 293 B கிராம அலுவலர் பிரிவில் முருதமுரே அல்லது முருதமுரய கிராமத்தில் அமைந்துள்ள உத்தரவு பெற்ற நில அளவையாளர் H. A. K. ஹேமசந்திர அவர்களினால் தயாரிக்கப்பட்ட இலக்கம் 12/ 124 உடைய வரைபடத்தின் துண்டு இலக்கம் 3A மற்றும் 3B என சுட்டிக்காட்டப்பட்டுள்ள சுமார் 12 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தையுடைய கமகெய் திவெல் மெதஇரிகொன்த மற்றும் கொடஇரிகொன்த என்றழைக்கப்படுகின்ற பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள இரண்டு காணிப்பகுதிகள்.*

துண்டு இலக்கம் : 3A விஸ்தீரணம் : சுமார் 0.01518 ஹெக்டயார் (6 பேர்ச்சஸ்)

வடக்கு : இக்காணியின் 1 ஆம் இலக்க காணித்துண்டு ;
கிழக்கு : இக்காணியின் 2 ஆம் இலக்க காணித்துண்டு மற்றும் காணித்துண்டு 3 B ;
தெற்கு : இக்காணியின் 3 B ஆம் இலக்க காணித்துண்டு மற்றும் 6 ஆம் இலக்க வீதி ;
மேற்கு : ஹக்மனயிலிருந்து முருதமுரே வரையான வீதி ;

துண்டு இலக்கம் : 3B விஸ்தீரணம் : சுமார் 0.01518 ஹெக்டயார் (6 பேர்ச்சஸ்)

வடக்கு : இக்காணியின் 1, 2 ஆம் இலக்க காணித்துண்டுகள் மற்றும் காணித்துண்டு 3A ;
கிழக்கு : இக்காணியின் 2 ஆம் இலக்கம் மற்றும் காணித்துண்டு 3 C ;
தெற்கு : இக்காணியின் 3 C ஆம் இலக்க காணித்துண்டு மற்றும் 6 ஆம் இலக்க வீதி ;
மேற்கு : இக்காணியின் 3 A ஆம் இலக்க காணித்துண்டு மற்றும் 6 ஆம் இலக்க வீதி ;

*காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் :* 01. திரு. எச். டபிள்யூ. நிஹால் பிரேமகுமார,
இலக்கம் 347/1, பொலிஸ் வீதி,
ஹக்மன.

*10-97*

---

## *1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டம்*

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணாயக்கார ஆகிய நான், குறித்த சபைக்கு காலி நகர எல்லை கழிவுநீர் முகாமைத்துவச் செயற்திட்டத்தின் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு கிங்தொட்ட - கலேகான வீதியிலிருந்து உட் செல்வதற்காக தற்போதுள்ள வீதியை விரிவாக்குவதற்காக 02 காணிப்பகுதிகளை சுவீகரித்துக்கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையினால், இங்கு கீழ் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதிகளின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக்கொள்ளும் கட்டளையினுடாக அனுமதியளிக்கின்றேன்.*

**வாசுதேவ நாணாயக்கார,**
*நீர் வழங்கல் அமைச்சர்.*

தொடர்பு இல.: DVP/02/02/GL/246.
நீர் வழங்கல் அமைச்சு,
இலக்கம் 35, "லக்திய மெதுர",
புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2021, செத்தெம்பர் 21.

**அட்டவணை**

*காலி மாவட்டத்தில், கடவத் சதர காலி பிரதேச செயலகப் பிரிவில், இலக்கம்: 103 A - கிங்தொட்ட கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் கிங்தொட்ட கிராமத்தில் அமைந்துள்ள இத்துடன் இணைக்கப்பட்டுள்ள திட்டப்படத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 01 ஆம் இலக்க பிரிவு*

*(சுமார் 25.6 பேர்ச்சஸ்) மற்றும் 02 ஆம் இலக்க பிரிவு (சுமார் 01 பேர்ச்சஸ்) என சுட்டிக்காட்டப்பட்டுள்ள பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள 02 காணிப்பகுதிகள்.*

*துண்டு இலக்கம் - 01 வாலுகாராம விகாரை உரிமம் கோரும் காணியிலிருந்து சுமார் 25.6 பேர்ச்சஸ் :*

*வடக்கு : கிங்தொட்ட - கலேகான வீதி ;*
*கிழக்கு : இக்காணியின் எஞ்சியுள்ள பகுதி ;*
*தெற்கு : உரிமையாளரை கண்டறிய முடியாதுள்ள காணி ;*
*மேற்கு : தற்போது காணப்படும் உட் செல்லும் பாதை.*

*காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் :* வணக்கத்திற்குரிய விகாரை அதிபதி தேரர்,
வாலுகாராம மஹா விகாரை,
தடல்ல, கிங்தொட்ட,
காலி.

*துண்டு இலக்கம் - 02 ரூநகே வத்த என்றழைக்கப்படுகின்ற காணியிலிருந்து சுமார் 01 பேர்ச்சஸ் :*

*வடக்கு : இக்காணியின் எஞ்சியுள்ள பகுதி ;*
*கிழக்கு : தற்போது காணப்படும் உட் செல்லும் பாதை ;*
*தெற்கு : திரு. பி. எச். திலகரத்ன அவர்களின் காணி ;*
*மேற்கு : கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்காக முன்மொழியப்பட்டுள்ள காணி மற்றும் தற்போதுள்ள உட் செல்லும் பாதை.*

*காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் :* திரு. மெடில்டா எதிரிசிங்ஹ,
இலக்கம் : 34/5 ஏ,
கனத்த வத்த,
போபெ வீதி, கிங்தொட்ட.

*10-98*

---

**1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணாயக்கார ஆகிய நான், குறித்த சபைக்கு பூண்டுலோயா நீர் வழங்கல் திட்டத்தின், பூண்டுலோயா நீர் சுத்திகரிப்பு மத்திய நிலையத்தை நிர்மாணிப்பதற்கு காணித்துண்டு ஒன்று தேவைப்பட்டுள்ளமையினால், இங்கு கீழ் காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணித்துண்டின் அசையாச் சொத்தின் உரிமையை சுவீகரித்துக்கொள்வதை இக்கட்டளையினூடாக அனுமதிக்கின்றேன்.*

**வாசுதேவ நாணாயக்கார,**
*நீர் வழங்கல் அமைச்சர்.*

தொடர்பு இல.: DVP/02/01/KY/245.
நீர் வழங்கல் அமைச்சு,
இலக்கம் 35, "லக்திய மெதுர",
புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2021, செத்தெம்பர் 21.

**அட்டவணை**

*மத்திய மாகாணத்தின், கண்டி மாவட்டத்தில், கொத்மலை பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 468ஆ, சீன் வத்த கிராம அலுவலர் பிரிவில், சீன் வத்த கிராமத்திலமைந்த, "சீன் வத்த" எனும் காணியில் முழு அளவில் சுமார் 01 ஏக்கர் 02 ரூட் அளவிலான கீழ் காணப்படும் எல்லைகளில் அமைந்த காணித்துண்டு.*

*காணியின் எல்லைகள் :*

*வடக்கு : பூண்டுலோயா இலிருந்து குடாஓய வரையிலான பாதை ;*
*கிழக்கு : நீர் சுத்திகரிப்பு மத்திய நிலையம் அமைந்துள்ள காணி மற்றும் ;*
*தெற்கு : இந்த காணியின் எஞ்சிய பகுதி;*
*மேற்கு : இந்த காணியின் எஞ்சிய பகுதி.*

*காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் :* *01. எல்பிடிய பெருந்தோட்ட நிறுவனம்,*
*இலக்கம் 73/3,*
*வோட் பிளேஸ்,*
*கொழும்பு 07.*

*10-99*